**தலைப்பு 209 – தேசிய சுவடிக் காப்பு திணைக்களம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, தேசிய சுவடிக் காப்பு திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் செயலகத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு நோக்கெல்லை

---

தலைப்பு 209 – தேசிய சுவடிக் காப்பு திணைக்களத்தினால் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தேசிய சுவடிக் காப்பு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.15 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காாண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற்கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தல். | 1. செயல் நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2.1.1 |
| | | 2. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை | 2.11 |
| | | 3. உள்ளகக் கணக்காய்வில் குறைபாடுகள் | 2.13 |
| | | 4. பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயல் முன்னேற்றம் அடையாத செயற்திட்டங்கள் | 2.1.2 |
| | | 5. முகாமைத்துவத் திறமையின்மை | 2.6 |
| | | 6. ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தாமை/ மிகை ஏற்பாடு | 2.7 |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரச ஏனைய மேலதிக ஏற்பாடுகள் தமது திணைக்களத்தினால் கடை பிடிக்கப்படுவதாகவும் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள ஏற்பாடுகள் வழங்குவதாகவும், | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை | 2.11 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(உ) | அரசுக்கு சொந்தமான அல்லது அரசின் பொறுப்பில் காணப்படும் பணம், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவானதும் மற்றும் முறையான ஏற்பாடுகள் மேற்கொள்வதாகவும் அவற்றை இடையிடையே மெய்மையாய்தல் செய்யப்படு வதாகவும், அவற்றை உரிய முறையில் தீர்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அவ்வாறு தீர்த்தல் செய்வதற்கு உரிய பிரமாணங்களுக்கு மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் எனவும்,- | சொத்துக்கள் முகாமைத்துவத்தில் குறைபாடுகள் | 2.3 |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள கட்டண ங்கள் ஆகியவற்றை அறவீடு செய்வதற்கு விஷேட ஏற்பாடுகள் மேற்கொள்வ தெனவும் அந்த கருமம் சாட்டப்பட்டிருந்த உத்தியோ கத்தவர்களினால் நிலுவை பணம் தொடர்பாக அவற்றை அறவீடு செய்தவை விரைவு படுத்துவதற்காக எடுக்கப்பட்ட கட்டங்கள் தொடர்பாக குறைந்தளவு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வேறு முறையில் கட்டளையிட்டுள்ளவாறு தனக்கு அறிவிப்பதாகவும், | அரசாங்க உத்தியோகத்தர் களுக்கான முற்பணக் கணக்கில் நிலுவையான கடன் மீதிகளை அறவிடல் | 2.8 |
| 128(1)(ங) | பிணை கட்டுவதற்கு ஆளாகிய உத்தியோகத்தர்கள் நடை முறையிலுள்ள கட்டளைகளுக் கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க அவ்வாறு செய்கின்றார் எனவும், | குறித்த உத்தியோகத்தர் களிடமிருந்து பிணை பெற்றுக் கொள்வதில் குறைபாடுகள் | 2.15 |
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களின்/ ஊழியர் களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை | நட்டங்களும் சேதங்களும் | 2.4 |

கணக்கீட்டு உத்தியோகத்தர் களினால் பின்பற்றப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள்/ ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுமெனவும், (கண்காணிக்கும் பொருட்டு போதிய ஒழுங்குகள் மேற்கொள்வது அவரின் பொறுப்பாக உள்ளதெனவும்)

**2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**2.1 செயலாற்றுகை**

**2.1.1 திட்டமிடல்**

2017 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரித்திருக்கவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான நாளது வரையான நிறுவனத்தின் அமைப்பு கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போது கடமையாற்றும் பதவியணி தொடர்பாக விபரங்கள் செயல் நடவடிக்கைத் திட்டத்துடன் சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்ட முக்கியத்துவத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்த செயற்பாடுகள் திட்டம் கொண்ட முக்கியத்துவதத்தினை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட செயற்பாடுகள் திட்டம் (Activity Plan) செயற்படுத்திய காலசட்டகம் (Time Line) மற்றும் அந்த செயற்பாடுகளின் மூலம் எதிர்பார்த்த வெளியீடு/ விளைவு (output/outcome) மதிப்பிடப்பட்டு குறிப்பிட்டிருக்கவில்லை.

(இ) வருடாந்த செயற்பாடுகளுக்கு கட்டுநிதி தேவைத் திட்டம் (Imprest Requirement Plan) செயல் நடவடிக்கைத் திட்டத்துடன் சமர்ப்பித்திருக்கவில்லை.

**2.1.2 செய்பணிகள் நிறைவேற்றியிருக்காமை**

**(அ) பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் முன்னேற்றமொன்றினை பெற்றிருக்காத செயற்திட்டங்கள்**

தேசிய சுவடிக்காப்பு திணைக்களத்தில் பழைய கட்டிடத்தின் மின்சார ஓட்டவழி முறைமையை முற்றாக நவீனமயப்படுத்துவதற்கான ஒப்பந்தவேலை 2016 திசெம்பர் 29 திகதி கட்டிடத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதற்காக கட்டிடத் திணைக்களம் சமர்ப்பித்திருந்த மதிப்பீடு ரூபா 13,598,750 தொகை ஆகக் காணப்பட்டதுடன் அப் பெறுமதியில் ரூபா 5,608,059 தொகைக்கான காசோலை 2016 திசெம்பர் 31 திகதி கட்டிடத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. பணம் விடுவிக்கப்பட்டு 21 மாதங்கள் கடந்திருந்த போதிலும் 2018 அக்தோபர் 10 திகதி

மின்சார ஓட்டவழி முறைமை நவீன மயப்படுத்துவதற்கு அல்லது பணத்தினை திருப்பி பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. கட்டிடத்தின் முழுமையான திருத்த வேலை மேற்கொள்வதற்கு வேண்டியிருந்த போதும் மின்சார ஓட்டவழி முறைமை நவீனமயப்படுத்தும் அலுவல்கள் மாத்திரம் பணம் செலுத்தியிருத்தல் இந்த தாமதத்திற்கு காரணமாக இருந்தது என மேலும் அவதானிக்கப்பட்டது.

### 2.1.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 திகதி 402 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தினால் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், அவ் அறிக்கை 2018 செப்தெம்பர் 30 திகதி அளவிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை.

### 2.1.4 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் 2030 ஆண்டு ''நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டிக் காணப்படுவதுடன் மீளாய்வாண்டு தொடர்பாக திணைக்களத்தினால் தனது நோக்கெல்லையின் கீழ் வரக்கூடிய கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக அறிந்திருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஏதேனும் விடயம் ஒன்றின் சரியான செயலாற்றுகையை அளவீடு செய்வதற்காக சரியான தரவு அடிப்படை ஒன்று காணப்படுவது கட்டாயமாக இருந்த போதிலும், திணைக்களத்தினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நெருங்குவதை அளவீடு செய்வதற்காக சரியான தரவு அடிப்படையொன்றினை பேணப்படுவதற்கு முடியாதிருந்தது.

(ii) நிலைபேறான அபிவிருத்தி இலக்கினை நெருங்குவதற்கு தயாராகும் போது ஏனைய அரச நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட்டிருக்கவில்லை.

## 2.2 பெறுகை செயன்முறையின் ஊடாக வழங்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ளல்

திணைக்களத்தினால் அரச பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் செயற்பட்டு வழங்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 27.7 மில்லியனுக்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 10 மில்லியன் ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 17.7 மில்லியன் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அவை ஒதுக்கப்பட்டிருந்த தேறிய ஏற்பாடுகளில் 64 சதவீதமாகும்.

## 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

### (அ) சொத்துக்களை ஆவணப்படுத்தல்

திணைக்களத்தினால் ஆண்டின் போது மேற்கொண்டிருந்த மூலதன செலவுகள் ரூபா 121,700,729 தொகையில் ஒதுக்கீட்டுக் கணக்கில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் அசைவுகள் தொடர்பாக அறிக்கையில் ரூபா 7,523,104 தொகை மாத்திரம் காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் டீஜிஎஸ்ஏ.4 அட்டவணையில் காட்டப்படும் பெறுமதிகள் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களின் அசைவு மீதான

அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பெறுமதிகளிடையே ரூபா 114,177,625 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

**(ஆ) வாகனப் பயன்பாடு**

**எரிபொருள் எரிவு பரிசோதனை செய்யாமை**

2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பந்தியின் பிரகாரம் அனைத்து வாகனங்களினதும் எரிபொருள் எரிதல் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

(i) இரத்தினபுரி உப அலுவலகத்திற்கான 2015 திசெம்பர் மாதம் ரூபா 2,927,481 தொகை பெறுமதியான உருக்கு ஏந்தானம் மற்றும் துணைக் கருவிகள் கொள்வனவு செய்திருந்த போதிலும் தொல்பொருளியல் திணைக்களத்தினால் உத்தேச கட்டிடத்தை தனதாக்குவதற்கு முடியாமல் போனதால் 2018 அக்தோபர் மாதம் அளவிலும் இந்த உபகரணங்கள் பயன்படுத்தாமல் காணப்பட்டது.

(ii) திணைக்களத்தின் சட்டம் சார்ந்த வைப்புப் பகுதிக்காக 2015 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 2,459,553 தொகை பெறுமதியான ஏந்தானங்களுக்கான மூலப் பொருட்களுக்காக ரூபா 975,168 இற்கான துணைக் கருவிகள் குறிப்பிட்ட விடயத்திற்காக பயன்படுத்தியிருக்காததுடன் 2018 அக்தோபர் வரையும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(iii) 2014 ஆண்டின் போது நகர அபிவிருத்தி அதிகார சபையினால் ரூபா 14,853,858 தொகை ஒன்று செலவிடப்பட்டு சுவடிக் காப்பு திணைக்களத்தின் சிற்றுண்டிச்சாலை நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் கூரை உரிய நியமத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் மற்றும் காற்று பங்களிப்புடனான சுவருக்குப் பதிலாக பொலிதீனால் மறைக்கப்பட்டிருந்தது. இதன் காரணத்தினால் மழைநீர், சிற்றுண்டிச்சாலையின் உள்ளே வருவதினால் சிற்றுண்டிச்சாலை திறக்கப்பட்டு 18 மாதங்களில் மூடுவதற்கு நேரிட்டிருந்தது. 2016 மே மாதம் மூடப்பட்டிருந்த இந்த சிற்றுண்டிச்சாலை குறைபாடுகள் திருத்துவதற்காக திட்டமிட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 திகதி அளவிலும் அந்த திட்டங்கள் செயற்படுத்தியிருக்கவில்லை.

**2.4 இழப்புக்களும் சேதங்களும்**

2012 ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த புதிய கட்டிட வளவில் நான்கு மாடிகளிலும் காணப்பட்ட பாரிய அளவில் பரவியிருந்த கிரல்கள் அதே ஆண்டிலேயே சரிசெய்யப்பட்டிருந்த போதிலும், நிர்மாணிக்கப்பட்டு 05 வருடம் ஆகிய குறுகிய காலத்தில் இவ்வாறு கீறல் ஏற்படல் வழமையல்லாத விடயம் ஒன்றென அவதானிக்கப்பட்டது. மேலும் இந்த கட்டிடத்தின் இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் மாடிகளுக்காக நடமாடும் ஏந்தானம் முறைமை (Mobile Racking System) நிறுவிய பின்னர் அதன் மேல் பாரிய அளவிலான ஆவணங்கள் அடுக்கப்படுமிடத்து கட்டிடத்தின் இந்த வெடிப்புக்கள் மேலும் விரிவரைந்து ஆபத்து நிலைமையொன்று ஏற்பட வாய்ப்பு உண்டு என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 2.5 தீர்க்கப்பட்டிருக்காத கணக்காய்வு பந்திகள்

திணைக்களத்துடன் தொடர்புடைய 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் அடங்கியுள்ள கணக்காய்வுப் பந்திகளின் மூலம் சுட்டிக் காட்டிய பற்றாக்குறைகள் தொடர்பாக அமைச்சினால் சரிசெய்திருந்த பந்திகளுடன் தொடர்பு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் தொடர்பு<br>பந்தி இலக்கம் | தொடர்புடைய விடயம் |
|---|---|
| 3.2 | ரூபா 15.7 மில்லியன் தொகைக்கு கொள்வனவு செய்திருந்த வரைபுகளை ஸ்கான் பண்ணும் இயந்திரம் தொடர்பாக உற்பத்தியாளரின் அதிகாரம் அளிக்கப்பட்ட கடிதத்தின் ஆரம்பப் பிரதி, 3 வருட காலப் பகுதிக்கான உத்தரவாதச் சான்றிதழ் மற்றும் உற்பத்தி ஆண்டை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் ஆகிய சான்றுகள் சமர்ப்பித்திருக்கவில்லை. |
| 3.14(ஆ) | சிற்றுண்டிச்சாலை நீண்ட காலமாக மூடியிருந்த மையால் 118 பேரைக் கொண்ட பதவியணியினருக்கு உணவு பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமான இடம் ஒன்று காணப்படவில்லை. |

## 2.6 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சட்டம் சார்ந்த வைப்புக்கள் பண்டகசாலை நிறுவப்பட்டுள்ள 6 மாடிகளை கொண்ட பழைய கட்டிடத்தில் இரண்டாம் மாடியில் மழைநீர் ஒழுகிய நிலையில் காணப்பட்டது. மழைநீரின் காரணமாக ஈரத்தன்மை காணப்பட்டதால் ஆவணங்கள் அழிவடைய இடமிருப்பதாகவும், கட்டிடத்தின் நீடித்த தன்மை போலவே வாழ்க்கைக்கு ஆபத்து ஒன்றிற்கும் காரணமாக இருக்கலாம் எனவும் அவதானிக்கப்பட்டது. இந்த ஆபத்து பல வருட காலமாக காணப்பட்ட போதிலும் அந்த நிலைமையை தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) நடமாடும் ஏத்தானம் பொருத்தும் ரூபா 169 மில்லியனிற்கான ஒப்பந்த வேலைக்காக உடன்படிக்கையின் 26(1) இலக்கங் கொண்ட நிபந்தனையின் பிரகாரம் 2016 திசெம்பர் 26 திகதிக்கு முன்னர் வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடைபெறாமையால் 2017 மார்ச் இரண்டமாம் வாரம் வரை காலநீடிப்பு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2017 செப்தெம்பர் 15 ஆம் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணமாகிய ரூபா 16.9 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.7 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 5 வருட காலப்பகுதியில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு மீதான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 81.9 | 77.4 | 4.5 | 5.49 |
| | மூலதன | 294.2 | 67.5 | 226.7 | 77.06 |
| | **மொத்தம்** | **376.1** | **144.9** | **231.2** | **61.47** |
| 2014 | மீண்டுவரும் | 93.8 | 90.2 | 3.6 | 3.84 |
| | மூலதன | 77.2 | 75.7 | 1.5 | 1.94 |
| | **மொத்தம்** | **171.0** | **165.9** | **5.1** | **2.98** |
| 2015 | மீண்டுவரும் | 109.8 | 98.7 | 11.1 | 10.11 |
| | மூலதன | 176.4 | 35.5 | 140.9 | 79.88 |
| | **மொத்தம்** | **286.2** | **134.2** | **152.0** | **53.11** |
| 2016 | மீண்டுவரும் | 112.1 | 104.7 | 7.4 | 6.60 |
| | மூலதன | 220.8 | 95.3 | 125.5 | 56.84 |
| | **மொத்தம்** | **332.9** | **200.0** | **132.9** | **39.92** |
| 2017 | மீண்டுவரும் | 113.9 | 97.7 | 16.2 | 14.22 |
| | மூலதன | 247.8 | 121.7 | 126.1 | 50.89 |
| | **மொத்தம்** | **361.7** | **219.4** | **142.3** | **39.34** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) ஒதுக்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தாமை**

திணைக்களத்திற்காக ஒதுக்கியிருந்த மொத்த தேறிய ஏற்பாடுகள் ரூபா 361.7 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அவற்றில் ரூபா 219.4 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கியிருந்த மொத்த தேறிய உற்பத்தியில் ரூபா 142.3 மில்லியன் அதாவது 39 சதவீதம் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டுள்ளன.

**(ii) மீண்டுவரும் மிகை ஏற்பாடு**

மீளாய்வாண்டிற்காக 13 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 32.02 மில்லியன் தேறிய ஏற்பாடுகள் காணப்பட்டமையால் அச் செலவு விடயங்களுக்காக ரூபா 20.87 மில்லியன் பயன்படுத்திய பின்னர் ரூபா 11.14 மில்லியன் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், செலவு விடயங்களுக்கு ஒதுக்கியிருந்த ஏற்பாடுகளில் 25 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை வீச்சு அளவுகளில் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன.

**(iii) மூலதன மிகை ஏற்பாடு**

மீளாய்வாண்டிற்காக 13 மூலதன செலவு விடயங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 237.40 மில்லியனிற்கான தேறிய ஏற்பாடுகள் காணப்பட்டமையால் அச் செலவு விடயங்களுக்காக ரூபா 111.97 மில்லியன் தொகை பயன்படுத்திய பின்னர் ரூபா 125.43 மில்லியன் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் செலவு விடயங்களுக்கு ஒதுக்கியிருந்த ஏற்பாடுகள் 25 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சு அளவுகளில் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன.

## 2.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 20901 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 7.00 | 6.54 | 3.50 | 3.52 | 25.00 | 18.30 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் மீதிகள் தவிர ரூபா 415,833 தொகையாக காணப்பட்டதுடன் அந்த நிலுவை மீதி 5 வருடத்தை விட மிகையான காலம் முதல் காணப்பட்ட போதிலும் அந்த நிலுவை மீதியை அறவீடு செய்வதற்கு திணைக்களத்திற்கு இயலாதிருந்தது.

## 2.9 பொது வைப்புக் கணக்கு

(அ) திணைக்கள கணக்கு புத்தகங்களை, திறைசேரி புத்தகங்களுடன் இணக்கஞ் செய்வதற்கு நி.பி. 427 இல் ஏற்பாடுகளின் பிரகாரம் இணக்கக் கூற்று ஒன்று தயாரிக்கப்பட வேண்டுமெனினும் பொது வைப்புக் கணக்கு தொடர்பான அவ்வாறான இணக்கக் கூற்றொன்று தயாரித்திருக்கவில்லை.

(ஆ) திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 6000/0000/00/0015/0091/000 இலக்கம் கொண்ட வைப்புக் கணக்கில் இறுதி மீதியொன்று காணப்பட்ட போதிலும் திறைசேரியின் இறுதி கணினி குறிப்பின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு அந்தக் கணக்கில் ரூபா 742,282 இற்கான மறை மீதியொன்றும் மற்றும் ஆண்டின் போது வரவு வைத்த ரூபா 10,000 தொகை காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. இந்த வித்தியாசங்கள் தொடர்பாக இணக்கஞ் செய்தல் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.10 வங்கிக் கணக்குகள் செயற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**சீராக்கல் செய்ய வேண்டிய மீதிகள்**

திணைக்களத்தினால் 2017 ஆண்டின் போது செயற்படுத்தப்பட்டிருந்த வங்கிக் கணக்கு ஒன்று தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றினை பரிசோதனை செய்த போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றில் அடங்கியுள்ள இனங்காணப்பட்ட கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 281,309 தொகையாகக் காணப்பட்டதுடன், இனங்காணப்படாத பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 273,310 தொகையாகும்.

(ii) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றில் 2014 திசெம்பர் 31 திகதி முதல் காணப்படும் ரூபா 88,500 இற்கான வைப்பு செய்யப்பட்ட ஆனால் தேறியிருக்காத காசோலை ஒன்று எதுவித விசாரணையும் மேற்கொள்ளப்படாமல் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்பட்டது.

## 2.11 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் முறைப்படி மற்றும் நாளது வரை பேணப்பட்டிருக்காமையால் சில பதிவேடுகளில் முறைப்படி மற்றும் நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இழப்புக்கள் நட்டங்கள் பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | கணினிகள் துணைக் கருவிகள் மற்றும் மென் பொருட்கள் மீதான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 திகதிய IAI/2002/02 இலக்கங் கொண்ட திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | பொருட் பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(1) | முறைப்படி மற்றும் நாளது வரை பேணப்பட்டிருக்க வில்லை. |

## 2.12 இணக்கமின்மைகள்

### வரித் தேவைகளுக்கு இணங்காமை

பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் பிரிவு 5.4.12 இன் பிரகாரம் 2017 ஆண்டு தொடர்பாக பெறுமதி கூட்டிய வரி (VAT) அடைப்பதற்காக வைத்த பணம் செலுத்திய பின்னர் தொடர்ந்து வரும் மாதத்தில் 15 திகதிக்கு முன்னர் அந்த கொடுப்பனவு தொடர்பாக உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அறிவித்திருக்கவில்லை.

## 2.13 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வாளர் பதவி ஒன்று அங்கீகரிக்கப்ட்டிருந்ததுடன் நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவியிருக்கவில்லை.

## 2.14 மனித வள முகாமைத்துவம்

### இணைக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான, வெற்றிட பதவியணி மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் ஆளணி வேதன செலவின தொகுதிக்காக ரூபா 57 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு ஆளுக்கான செலவு ரூபா 485,855 தொகை ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 16 | 03 | 13 |
| (ii) | மூன்றாம் நிலை | 27 | 11 | 16 |
| (iii) | இரண்டாம் நிலை | 163 | 56 | 107 |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | ஆரம்ப நிலை | 86 | 48 | 38 |
| | | ------------ | ------------ | ------------ |
| | மொத்தம் | 292 | 118 | 174 |
| | | ====== | ===== | ===== |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

சுவடிக் காப்புத் திணைக்களத்திற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த 292 பதவியணியில் 174 வும் வெற்றிடமாக காணப்பட்டதுடன் திணைக்களத்தில் 43 சிரேஷ்ட மட்ட பதவிகளில் 29 பதவிகள் வெற்றிடமாக காணப்படல் நிறுவனத்தின் செயலாற்றுகை கீழிறங்குவதற்கு காரணமாக ஆக முடியுமென அவதானிக்கப்பட்டது.

**2.15 அரச ஊழியர்கள் பிணை வைத்தல்**

நிதிப் பிரமாணம் 880 இன் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களினால் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை.